செ.வெ.எண்: 14/ஜூன் நாள்:08.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்

இராமநாதபுரம் மாவட்டம், போகலூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதிகளில் இன்று (08.06.2016) மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை மூலம் மேற்கொள்ளப்பட்டு வரும் பல்வேறு வளர்ச்சிப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

முதலாவதாக போகலூர் ஊராட்சி ஒன்றியம், குமுக்கோட்டை கிராமத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள், பசுமை வீடுகள் திட்டத்தின் கீழ் ரூ.1.80 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கட்டுமானப் பணிகளையும், ரூபாய் 12 ஆயிரம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தனிநபர் கழிப்பறை கட்டும் பணிகளையும், தாய் திட்டத்தின் கீழ் ரூபாய் 3.25 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆழ் குழாய்கிணறு அமைக்கும் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து மஞ்சக்கொல்லை கிராமத்தில் மகாத்மா காந்தி ஊரக தேசிய வேலைவாய்ப்புத் திட்டத்தின் கீழ் ரூபாய் 13.12 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் கிராம ஊராட்சி சேவை மைய கட்டுமானப் பணிகளையும், தாய் திட்டத்தின் கீழ் ரூபாய் 1.50 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் தரை மட்ட நீர் தேக்க தொட்டி கட்டும் கட்டுமானப்பணிகளையும், ரூபாய் 1 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் மகளிர் சுகாதார வளாகம் பழுது பார்க்கும் பணிகளையும், ஒருங்கிணைந்த பள்ளி வளர்ச்சித் திட்டத்தின் கீழ் ரூ.4.87 இலட்சம் மதிப்பில் கட்டி முடிக்கப்பட்ட நடுநிலைப்பள்ளி சுற்றுச்சுவர் பணிகளையும், இந்திரா நினைவு குடியிருப்பு மற்றும் பசுமை வீடுகள் திட்டத்தின் நடைபெற்று வரும் பணிகளையும், தனிநபர் கழிப்பறைத் திட்டத்தின் கீழ் கட்டி முடிக்கப்பட்ட தனி நபர் கழிப்பறை பணிகளையும், தாய் திட்டத்தின் கீழ் ரூபாய் 10.38 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் ஆதி திராவிடர் மயான தார் சாலைப் பணிகளையும் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

அதன்பின்பு காமன்கோட்டை ஊராட்சியில் தமிழ்நாடு கிராமச் சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.47.50 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் காமன்கோட்டையிலிருந்து அரசமாக்கால் கோயில் வரை செல்லும் சாலை பணியினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இறுதியாக எட்டிவயல் ஊராட்சியில் தமிழ்நாடு கிராமச் சாலை மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ் ரூ.64.63 இலட்சம் மதிப்பில் மேற்கொள்ளப்பட்டு வரும் NH 49 முதல் தென்னவனூர் வரை செல்லும் சாலைப் பணியினையும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

இவ்வாய்வின் போது போகலூர் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் திரு.மாறன், வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) திருமதி.சித்ரா, உதவி பொறியாளர் திரு.ச.சுந்தரபூபதி, உதவி இயக்குநர் (தணிக்கை) திரு.செல்லத்துரை, உதவி கோட்டப் பொறியாளர் (சாலை மற்றும் பாலம்) திரு.பெருமாள் உள்பட அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்.**